## சிறைக்கைதிகள் நலன்புரி நிதியம் - 2012

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10 சிறைச்சாலைகள் நிறுவனங்களிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த தொலைக்காட்சி இயந்திரங்கள், டிவீடீ இயந்திரங்கள், விளையாட்டு உபகரணங்கள் அடங்கலான சொத்துக்களினை பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சுகாதார அமைச்சிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 5,000 பெறுமதியான சம்சுன் டிவீடீ இயந்திரம் ரூபா 50,000 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) போகம்பர சிறைச்சாலையின் சிறைக்கைதிகளிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 77,350 ஆன பரிசுப் பொருள் செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த நன்கொடைச் சொத்துக்களிற்கான சரியான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 107,241 ஆக காணப்பட்ட போதிலும், அது ரூபா 137,155 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 29,914 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 721,303 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 699,262 ஆகக் காணப்பட்டது. நிதியத்தின் வருமானம் ரூபா 87,453 ஆல் குறைவடைந்தும் செலவினம் ரூபா 65,413 ஆல் குறைவடைந்தும் இருந்தமையால் நிதிசார் விளைவுகள் ரூபா 22,040 ஆல் வீழ்ச்சியடைவதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானம் ரூபா 2,370,853 ஆக காணப்பட்டதுடன் சிறைக்கைதிகளின் நலன்புரிச் செயற்பாடுகளிற்காக ரூபா 1,447,558 செலவிடப்பட்டிருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | செலவிடப்பட்ட தொகை |
|---|---|
| | ரூபா |
| சிறைக்கைதிகளின் ஆன்மீக மற்றும் சமயச் சடங்கு நிகழ்வுகள் | 459,248 |
| சிறைக்கைதிகள் கல்வி மற்றும் நலன்புரி | 315,545 |
| சிறைக்கைதிகளிற்கான களியாட்ட விளையாட்டு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் | 585,242 |
| சிறைக்கைதிகளிற்கு பரிசுகளை வழங்குதல் | 57,203 |
| சிறைக்கைதிகளின் பிற் பொறுப்புச் சேவை நடவடிக்கைகளிற்கான செலவினம் | 30,320 |
| | 1,447,558 |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 12 சிறைச்சாலை நிறுவனங்கள் தொடர்பில் பாதிடப்பட்ட பெறுவனவுகள் மற்றும் உள்ளபடியான பெறுவனவுகளிற்கிடையே 32 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டமையால் மதிப்பிடப்பட்ட வருமானங்களை அறவிடுதல் பலவீனமான நிலையில் காணப்பட்டமையை குறிக்கின்றது.

(ஆ) சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மதிப்பீடுகளிற்கும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளிற்குமிடையே 19 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

சிறைக்கைதிகளின் நலன்புரி நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) நிதிகள் மீதான கட்டுப்பாடு

(இ) சிறைக்கைதிகள் நலன்புரி